[1973 ஆகஸ்ட் 6

சென்னை துறைமுகத்தில் இயந்திரம் புகுத்தல் திட்டம்

*38 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகத்தில், இரும்புக் கனி ஏற்றுமதித் துறையில் இயந்திரம் புகுத்தல் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதை இவ்வரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதனால் வேலை இழக்கும் இம்மாநிலத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தரும்படி மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) சென்னைத் துறைமுகம் இரும்புக்கனியை இயந்திரங்கள் மூலம் எடுத்துக் கப்பலில் ஏற்றுவதற்கு அதன் வெளித்துறையில் (outer docks) வசதிகள் வைத்துள்ளது. ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் இரும்புக் கனியை இயந்திரங்கள் மூலம் கப்பலில் ஏற்றி ஏற்றுமதி செய்வதற்கும், ஏற்றுமதி அளவை ஆண்டொன்றுக்கு 8 மில்லியன் டன்னாகப் படிப்படியாக உயர்த்தவும் தேவையான வசதிகளைப் பெற்றுள்ளது. கப்பல்களில் கனியை விரைவாக ஏற்றுவதற்கும், இரும்புக்கனி வாணிபத்தைப் பெருக்கவும் இந்த வசதிகள் இன்றியமையாதவை ஆகும். இந்த ஏற்பாடு 1975 தொடக்கத்தில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டம் நிறைவு பெற்றவுடன் பொறியியல் வல்லுநர்கள், தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். கனிப் பொருள்களை ஏற்றும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ள பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அனைவரும் தொடங்கக் கருதப்பட்டுள்ள திட்டத்தில், பணியில் இருத்திக் கொள்ளப்படுவார்கள். தவிர தேர்ச்சி பெற்ற பணியாளர்கள், பொறியாளர்கள் சிலர் கூடுதலாகப் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்/பதவி உயர்வு கொடுக்கப்படுவர். தற்போது இரும்புக்கனியை கப்பலில் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சில தொழிலாளர்கள் தேவைக்கு அதிகமாகிவிடலாம். இந்த அதிகப்படியான தொழிலாளரின் எண்ணிக்கை இந்தக் கனிப்பொருள்கள் ஏற்றும் பிரிவு தொடங்கப்

படும்போது இருக்கும் பிற வாணிப வளர்ச்சியைப் பொறுத்து அமையும். பணியாளர்களை வேறு வேலைக்கு மாற்றுதல், தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டங்களைக் கொண்டு வருதல் ஆகியவை குறித்துப் பொருத்தமான திட்டங்களை வகுப்பது குறித்து 1974 ஆம் ஆண்டில் துறைமுக அதிகாரிகளால் நிலைமை ஆய்வு செய்யப்படும்.

Tuticorin Harbour Project

* 39 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in completing the Tuticorin Harbour Project?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தூத்துக்குடி துறைமுகத் திட்டம் மத்திய அரசு திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட சில இன்னல்கள்தான் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதத்துக்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர்களின் பிரச்சினையை மத்திய அரசு கவனித்தது. தூத்துக்குடி துறைமுகத் துறை முழு அளவுக்கில்லாவிட்டாலும் ஓரளவு குறிப்பிட்ட அளவுக்காவது செயல்படும் விதத்தில் 1973 ஆம் ஆண்டு இறுதிக்குள் துறைமுகம் பயன்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத் தொடக்கத்தில் துறைமுகத் திட்டப்பணி முழுவதும் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்தத் திட்டத்திற்கு எற்கெனவே மதிப்பிடப்பட்டத் தொகையிலிருந்து எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு முதலில் போட்ட மதிப்பு 24.40 கோடி ரூபாய். இப்போது போடப்பட்டிருக்கும் மதிப்பு 21.76 கோடி ரூபாய் ஆகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ஒப்பந்தக் காரர்களுக்கு என்ன தகராறு ஏற்பட்டது? அதன் விபரம் என்ன?